1995 ஏப்ரல் 21]

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி நான் போன சி.எம்.டி. காலத்தில் போட்டது. அதாவது ஒரு வருடத்திற்கு முன்னால். அப்போது அப்படிப்பட்ட நிலை., கிளையில் இருந்த அதிகாரங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, எல்லா ஃபைல்களும் சென்னைக்கு வர வேண்டுமென்று ஒரு நிலை இருந்தது. தற்போது இருக்கிற புதிய சி.எம்.டி., எப்போதும் போல் இப்போது ஒழுங்கான முறையில் இந்த நிர்வாகம் இயங்கிக் கொண்டிருப்பதை நான் அறிவேன். எனவே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *391*, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் *392*, திரு.வெ. தமிழரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

392—

தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் நியமனம்

**38173*—திரு. வெ. தமிழரசு:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் பதவியினை தோட்டக்கலைத் துறையில் பணிபுரியும் வேளாண்மைப் பட்டதாரிகளைக்கொண்டு நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைப் பட்டதாரிகள் மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகள் கொண்ட ஒருங்கிணைந்த முதுநிலை பட்டியல், தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் ஆணையை அடிப்படையாகக் கொண்டு அரசு எண் *137*, வேளாண்மை, நாள் *20-3-1995*ல் ஆணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்களிடமிருந்து விருப்பத் தேர்வு பெற்று தற்காலிக தோட்டக்கலை உதவி இயக்குநர் பதவி உயர்வு அளிக்க வகை செய்யப்படும்.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார், கருமமே கண்ணாயினார்; காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக அக்கறை உடையவர்கள் உழைப்பதால் ஏற்படும் உடல் உபாதையை பொருட்படுத்த மாட்டார்கள், வேளாவேளைக்கு உணவு அருந்த வேண்டுமென்று அக்கறை காட்ட மாட்டார்கள், தூங்கி ஓய்வு எடுத்துக் கொள்வதிலும் அவர்களுடைய கவனம் செல்லாது, இந்தக் காரியம் செய்வதற்கு கடினமாயிற்றே என்று மலைக்க மாட்டார்கள். அவமதிப்பிற்கு உள்ளாக வேண்டியிருக்குமோவென அதைரியமும் அடைய மாட்டார்கள், வெற்றி குறிக்கோளில் உறுதி உள்ளவர்கள் குணங்கள் இப்படித்தான் இருக்கும். இத்தகைய குணங்களும், சிறப்புகளும் ஒருங்கே பெற்ற நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி மேல் வெற்றி, நேற்றும், இன்றும், நாளையும், எப்போதும் என்று சொல்லி, நம்முடைய புன்னகை மன்னன், பூவிழிக் கண்ணன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் அவர்களுக்குப் புகழ் பாடினீர்களானால் உங்கள் நேரம் சரியாகப் போகும். (சிரிப்பு) கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வெ. தமிழரசு: ஆகவே, இந்த தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் பதவியில் தோட்டக்கலைத் துறையில் புணிபுரியும் வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வாய்ப்பு அளித்தமைக்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

முற்பகல் *10-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெறும் நன்றி மட்டும் சொல்வதாக இருந்தால், அமைச்சர் அவர்களுக்குப் புகழ் பாட உங்களை விட்டிருப்பேன்.

வினா எண் *393*, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை.

வினா எண் *394*, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.